
# ப்ரியூரண் அரிய கருத்து !








# "பரிபூரண்" அரிய கருத்து!

வெளியீடு :
**அன்பின் குடில்,**
253/1, மேட்டூர் - பவானி மெயின் ரோடு,
**கோம்பூர், நெரிஞ்சிப்பேட்டை,**
**அந்தியூர் தாலுக்கா, ஈரோடு மாவட்டம்,**
தமிழ்நாடு - 638 311
**தொலைபேசி : (04256) 227655**
**மின் அஞ்சல் : anbinkudil@yahoo.co.in**

முதற்பதிப்பு : பரிபூரண ஆரதி விழா
**தை 17 2016 (31.01.2016)**

**பிரதிகள் : 350**

அச்சிட்டோர்:
ஆரித்ரா பிரிண்டர்ஸ்,
பெங்களூர் - 560 003.
தொலைபேசி : (080) 23346025




ஸத்திய வாக்கு (1)

"ஸத்தியம் பேசு.
தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு."
ஸத்தியம் பேசினால்; தர்மம் நிலைபெறும்

"பரிபூரண" அரிய கருத்து!

(1) "நான் & எனது" முழுமையாக நாசம் செய்தவன். அவனே "இறை & குரு" உணர்வோடு "எல்லாம் நீ" "எல்லாம் உனதே" என "சர்வசங்க பரித்தியாகம்" செய்தவனாகும். அவனே உண்மையான "பக்தன்" ஆகும் என ஸத்தியமாய் உணர்க. ஏனையோர் எவனாயினும், எவளாயினும், எவராயினும் பக்தனை போன்றவர்களே.

(2) "நான் & எனது" முழுமையாக நாசம் செய்து; "ஸ்ரீ பகவத் குரு அனுபவத்தை" பெற்று; "ஸ்ரீ ஸத்குரு வாக்கால்" "அது நாம்", "நாம் அது" என்றும் பின் "அனுபவத்தால்" "அதுவே யாம் யாமே அது" என்று "பரிபூரணத்வம்" பெற்றவர்




உ


"எவனோ? "எவளோ! "எவரோ? "அவரே"
"அத்வைத" நிலையை அடைந்த, "ஜீவன்
முக்தனும்" (ஞானியாகும்) ஏனையோர்,
ஞானியைப் போன்றவர்களாகும்."

குறிப்பு. றென்றல்?

பக்தனைப் போன்றவர் / ஞானியைப் போன்றவர்
உண்மை பக்தனும், உணர்ந்த ஞானியும் / ள்
"வைரக்கல்" போன்று ஒளியை உடையவர்கள்.
"ஏனையோர்" பக்தனையும், ஞானியையும்,
கண்ணாடிக்கல்" போன்று வைரத்தைவிட
அதிஒளிமிக்க உடையவர்களாகும்.
அதாவது சாஸ்திர, வேதம் கரை கண்டவர்
களாகும். அதாவது "நூல் அறிவு" உடையவர்கள்
அனுபவ அறிவுடையவர்களல்ல. ளாகும்.
"நாம் அது / அதுவே நாம்" விசிஷ்டாத்வைதம்.
"யாமே அது / அதுவே யாம்" சுத்த அத்வைதம்.
நாம் = இருமை. பன்மையல்ல. யாம் = ஒருமை.





இ மனிதன் இனம் உட்பட 84 லட்சம் ஜீவகோடிகளும், ஓரறிவுள்ள மரம், செடி, கொடி, புல், பூண்டு ஆகிய தாவர ஜங்கமங்களும் இவையெல்லாம் பிராணன் என்ற உயிர் உள்ளதாகும். அசைவன அனைத்தும் ஒருவனே/ ஒருவனுடைமையே/ ஒருவன் இயக்கமே/ என பரிபூரண நம்பிக்கை வைராக்கியமுடன் எந்த சலன சந்தேகமும் பேதமுமில்லாமல் ஆனந்தமாய் சாந்தி, அமைதி, திருப்தியுடன், கண்டும், கேட்டும் கொடுத்தும் வாங்கியும் அனுபவித்தால் அது விசிஷ்டாத்வைதம் என உணர்க.




4

4

முன் கூறியவைகளுடன்
அனைத்து சூரிய சந்திராதி மற்றும்
"கோள்களும் (அசைவன
அசையாதன) ஜீவ & ஜட சொரூபங்களும்
மண் பிரம்மமே என திட
மயமாகிய உறுதி நம்பிக்கை வைராக்கியமுடன்
"அதுவே நாம், நாமே அது"
என்ற "சர்வாத்ம பாவனையுடன்" அந்த ~~[illegible]~~
~~[illegible]~~ பின் ஸ்வய அனுபவத்தில்
"யாமே அது, அதுவே யாம்"
என்ற அகண்ட பரபாவனை
யால் மயமாவது அத்வைதம் ஆகும்.




5

கள்

5 எதிர்பார்ப்புகள் அதிகம் இருந்தால்,
ஏமாற்றமும் அதிகம் உண்டு.
ஆசைகளை குறைக்க ஒரே வழி
தேவைகள் குறைத்தால் ஆசைகள் குறையும்.
போதும் என நிறைவில் தேவைகளை குறைக்கவா
சலிப்படைந்து சஞ்சலம் அடைவதை தவிர்த்து. இறைவா
"இது போதும் ஐயனே" என நிறைவாய் தவிர்க்கலாம்.
குற்றம் குறை பிறரிடம் தோற்றினால், ஆத்திரம்
அடையாதே. இது நம்மிடம் உள்ளதே என உணர்ம்.
நீ திருந்த உன்னை திருத்த முயற்சி செய்.
நற் கவனம் ஆனந்தம் ஆகும் என உணர். தம்.
பிற் கவனம் குற்றம் குறை தப்பு தவறு, பழியாமமா
என சத்தியமாய் உணர்ந்து அடங்குவாயாக. அடக்காதே.
ஸ்ரீ ஆழ்வார் பாடிய பாசுரம் ஒன்று.

6 துஞ்சும் போது அழைமின். துயர் வரின்
நினைமின். நம்முடைய இரு வினைக்கு;
~~நம்முடைய~~ நஞ்சு தான் கண்டீர்
நமோ நாராயணா என்னும் நாமம்.




"இறைவன் ஒருவனே.
ஆனால் அவரவர் (6)
இஷ்ட தெய்வமாக
வருவான். அப்படி வரும்
இறைவனுக்கு பல பல நாம
ரூபங்களை ஞானிகள்
கொடுத்திருக்கிறார்கள். அவைகளில் உனக்கு
இஷ்டமான நாமத்தை சொல்லி அழைப்பாயாக.


(7) ஹேகுருதேவா! ஸத்திய சொரூபா!
ஸாந்தசொரூபா! ஸாஸ்வதசொரூபா! ஸதஸித்
ஆனந்தசொரூபா என்றோ? கிருஷ்ணா, ராமா,
கோவிந்தா என்றோ? முருகா, ஷண்முகா, வேலா!
என்றோ? விநாயகா! கணேசா! கணநாதா! என்றோ?
ஹர, ஹர. சிவ சிவ, பரமேஸ்வரா! என்றோ?
ஹல்லா! பிதாவே! புத்தபகவானே! மஹாவீர்! "

ஏதேனும் ஓர் நாமரூபமுள்ள
இறைவன்! உனக்கு இஷ்டமான
உறக்க "
கூவி, கத்தி, கதறி, உருகி கண்ணீர்
கசிய அழைப்பாயாக. அவசியம் இறைவன்
"ஏதேனும் ஓர் நாமரூபம் தாங்கி வருவான்."
உன்மனபாரம், உன் உடல்சிரமம்! பறந்தோடும்.
சொந்த, பந்த, உறவுகளை எண்ணாதே! அழைக்காதே.
அவை மேலும் மேலும் வினையிருக்கத்தையும்,
துன்பத்தையும் கொடுக்கும். இது ஸத்தியம்.


7



8 ஓம் நமோ நாரயணா! வாசுதேவா!
பரமாத்மா! பரந்தாமா! பராத்பரா!
பரமேஸ்வரா! மஹாதேவா! வாமதேவா!
சாம்பவா! தேவாதிதேவா! கங்காதரா!
கௌரிமனோஹரா! சந்திர சேகரா!
ஜடாதாரி! ஸ்ரீதரா! கிரிதரா! ஸ்ரீஹரி!
முரஹரி! அம்புஜாக்ஷி! பீதாம்பர்தாரி!
நீலவண்ணா! கமலக்கண்ணா! கார்மேக
வண்ணா! நீலவான ஸ்யாமள சொரூபா!
நீலகண்டா! நீரணிமுதல்வா! நந்திவாகனா
நாகபூரணா! கங்கை மோஹனா! சிற்றம்பல
வாணா! சிதம்பரேசா! நர்த்தனஸபேசா!
பொன்னம்பல வாஸா! ஸித்சபேசா! ஆடல்
அரசே! ஸ்மசானவாஸா! கைலாசவாசா
தாண்டவ அரசே! ஸத்திய சொரூபா!




ஸாந்த சொரூபா! ஸாஸ்வத சொரூபா
ஸத்ஸித் ஆனந்த சொரூபா! நித்ய சொரூபா!
நிரதிஸயானந்த சொரூபா! நின்மல சொரூபா
ஸின்மய சொரூபா! ஸிதாஹாய சொரூபா!
மாயா! ஆயா! வெண்ணெ உண்ட நேயா!
பக்தர்கள் சகாயா! பாண்டவர் தூதா!
பன்னஹ ஸயனா! பத்மநாபா! புருஷோ
த்தமா! புராண புருக்ஷா! புண்ணிய புருக்ஷா!
புண்டரீகாட்க்ஷா! பண்டரி நாதா! பாண்டு
ரங்கா! ஸ்ரீ ரங்கா! பரிபூரணா! ஸர்வ காரணா!
ஸர்வேசா! ஸர்வ வியபஹார்! ரகுபதி!
கஜபதி! சீதாபதி! வெங்கடாசலபதி!
ஏழுமலை வாஸா! ஏழைகளின் நேசா!
ஆபத்பாந்தவா! அனாதை ரட்க்ஷகா!
தீனதயாளு! தீன்பந்தோ! ஓம் ஜயனே!
ஆதிமத்யானந்த ~~சொரூபா~~ ரஹிதா!
ஜோதிநித்யானந்த சொரூபா!
அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகா!
அபயம்! அபயம்!! அபயம்!!! ஐயனே என
தினமும் மும்முறை அழுது அழைப்பாயாக.




9 ஆசைகாட்டி மோசம்செய்வதே
இந்த நாமரூப, ஜகஜீவ, உலகம், என
உலகை பழித்துக் கூறி, அனேகர்
நிந்திக்கின்றனர். இப்படி பழித்து
கூறுவதை விடுத்து விடவேண்டும்.

மாறாக?


ஆசை காட்டி, சாதனை செய்யும்
"நீ எப்படி இருக்கிறாய்?" என்ன
உன்னை பலப்பரீட்சையாக கொண்டதே
உலகம் என கூறி பணிந்து
தலைவணங்குங்கள்!!!
அப்படி நீ பணிந்து வணங்கில், மறு
கணம்! உன்னை வணங்கி பணிந்து
உனக்கு ஆவன செய்யும். உன் கண்களுக்கு
மட்டும் மறையும் இவ்வுலகம் இது ஸத்தியம்.




10 உன்வினை உடலைபரிசோதிக்கும் "டாக்டர், டாக்டரல்ல" டாக்டர் வேஷமணிந்து வந்திருக்கும் "ஸ்ரீ பகவான் ஸ்ரீ குருணை ஸத்தியமாய் உணர்ந்து நம்புவாயாக.

அவர் தரும் மாத்திரை, மருந்து, ஊசி, அறுவை சிகிச்சை, முதலியன "~~அவையல்ல~~." "அவை" களல்ல. அவை "பிரசாதம்" ஆகும் என ஸத்தியமாய் உணர்ந்து நம்புவாக.

அவருக்கு நீ கொடுக்கும் "பணம்" "பீஸ்" (கூலி) அல்ல. அவை "காணிக்கை" ஆகும் என ஸத்தியமாய் உணர்ந்து நம்புவாயாக.



(11)

உன் நம்பிக்கையே உன்
"பலம்" & "உன் சாதனை" ஆகும்.
"(1) இறை & குரு" (2) "பிரசாதம்" (3) "காணிக்கை" என
மூன்று "நாம ரூபங்களும்"
"உன் சொல் & செயலில்" மாறுபட்டால்,
"வினை & விதியை" மாற்றி
அமைக்கும்
ஸ்ரீபகவானின் "மாயா" என உணர்க.
"மாற்றி அமைக்கும்" என்றால் கடுமை & கொடுமைகள்
குறைந்து; சிரமம் இல்லாமல், அனுபவித்து
முடித்து விடலாம். அங்கு இறை & குரு
உணர்வு மாறாமல் மறையாமல் மறக்காமல்
ஸ்திரமாகவே இருக்கும் என உறுதியாய்
நம்புக. இதைப் போல் எல்லா நாம ரூபங்களையும்
மாற்றி அமைப்பாயாக.



12

11 வெள்ளைத்திரையில் ஓடும் திரைக் காட்சி அத்திரையில் ஓடுவதில்லை. அத்திரைக்காட்சியில் "ஓடும் சம்பவம்" அனைத்தும் "உண்மை" இல்லை. அது திட்டமிட்டு தயாரித்த ஓர் திரை காட்சி ஆகும்.

அதே போல் ஒவ்வொரு ஜீவனுடைய இருவினையை கொண்டு "காலதேவனால்" (ஸ்ரீ பகவானால்) தயாரிக்கப்பட்ட "மனத்திரை" காட்சி ஆகும்.

அதை மாற்றவோ, மறுக்கவோ, விலக்கவோ எவராலும் முடியாது. இயலாது. கூடாது. இதுவே பிரமாணமான உண்மை. ஆனால் அதில் "நாம்" "நிதர்சனமாக" தாக்கப்படுகிறோமென்றும், அனுபவிக்கிறோமே என்றும்,



13

மறப்பதும், மறந்துப் போவதும் "சர்வ சதா" இறை உணர்வில் தான் பெற முடியும். அதனைச் சாந்தி, அமைதி, திருப்தி பெற முடியும். இது மனம் உலர்ந்து போகும் நிலையாகும். மனம் உலர்ந்தால் தான் குருவாய் எறிக்க முடியும்.


கருதிதுக்கப் படுகிறாயா கொழுந்தே???

நன்றாக கவனி :- நீ உறங்கும் போது உன் "கனவில்" "காணும் காட்சிகள் அனைத்தும்" விழித்தவுடன் பொய் என உணர்கிறாய் அல்லவா?

அந்த விழிப்பு "உடனே தெரிகிறது."


இந்த விழிப்பு உடனுக்குடன், அப்போதைக்கப்போது உடனே தெரிவதில்லை.

இதன் காரணம் :- அந்த உறக்கம் உன் ஆன்மாவோடு மனம் சேரும் நிலையின் உறக்கமாகும். இந்த உறக்கம் உன் ஆன்மாவோடு உன் மனமும் நாமரூப ஜகஜீவ சொந்த பந்த பாசப் பற்றினால் வந்த மயக்கம் சேர்கிறது என உணர்வாயாக. மன உறக்கம் மனம் ஆன்மாவோடு சேர்ந்ததால் உடனே நீங்கி விட்டது.




கெஞ்சி கெஞ்சி,
கெஞ்சிக் கெஞ்சி,
கெஞ்சிக் கெஞ்சி,
அழுது முறையிடலாவது
அவன் மாயா அதை செய்
விக்கும். முறையிடுவது
பரிபகவானிடம். காரிய ஸித்தி அடைவது
மாயாவால் ஆகும் என உணர்க.

இந்த மன உறக்கம்; "நாமரூப"
"ஜகஜீவ தோற்றங்களின் பழக்கவழக்க
தோஷ குண" "மயக்கத்தினால்"
அறியாமையால் வந்ததாகும்.
"பக்தி & ஞான வைராக்கியத்தினால்"
மட்டுமே இவ்வுறக்கம் நாசமாகும்.
இதன் மார்க்கம் :- ஹே பரமாத்மா! பரந்தாமா!
ஹே பகவானே! இந்த மனதால் தோன்றிய மனதின்
நாமரூபங்களையும்; அதன் குணதோஷங்களையும்;
முழுமையாக மறக்கச் செய்வாயாக. பின்
வாயாக.
மறந்துபோக உணர்ச்சியற்ற கட்டையாக ஆகச் செய்.
பின் அம்மனதை இறக்கச் செய்வது எம்பெருமானின் ஸத்குரு
பரம கிருபையாகும். நீ வேறொன்றும் செய்ய வேண்டாம்.
உன்னிடம் வேறெதுவும் கேட்கவில்லை பிரபோ! கருணை
செய்வாயாக. என அழுது முறையிடுங்கள். அவஸ்யம்
அவன் கிருபை உண்டு.





ஹேகிருபா ஸாகரமே / கருணை
கடலே / தயாஸிந்து / தியாநிதே /
மனம் உருகி, உள்ளம் குழைந்து,
எம் இயலாமை யால் இதை உன்
செவியில் படும்நிலைக்கு இதை
உரைக்கிறோம். கிருபை கூர்ந்து
சற்று செவிசாய்ப்பாயாக. ஹே ஐயனே
உன்னையல்லால் வேறு எவரிடம் முறை
யிடுவோம்? எவர் உளர்? எவர்கள்???
இந்த மனிதமனமானது
கலங்க, கிலிக்க பயகற்பனையால்
எம்மை படாத பாடு படுத்துகிறது.
எல்லாம் நீயாகவும்; உனது
பொருளாகவும்; உனது செயலாகவும்;
உன்னையன்றி அணுவும் அசையாது என்பதும்
ஸத்தியமாக இருக்கும் போது; நான்;
என்றல்; என்னத/ விடமுடியாத
தன்மையால் கடும் அவஸ்தை படுகிறோம் ஐயனே!!!

16



இதை யாம் சொல்லித்தான் நீ தெரிய
வேண்டுமென்பதில்லை. நீயோ சர்வா
ந்தர்யாமி. இருந்தாலும் இந்த மன
குழப்ப புலம்பல் / சற்று செவி மடுப்பாயாக.
இந்த நாம ரூப கற்பனையான
ஜக ஜீவ தோற்றமானது நித்ய
ஸத்தியமாய் தோற்றத்தோடல்லாமல்,
உன் இருப்பை மறைக்கிறதே ஐயனே.
உன்னை மறைத்தால் அங்கு இருள் தானே ஐயனே?
மறைக்க முடியுமா? கூடுமா? முடியாதே ஐயனே?
,, முன்பே ஒருமுறை இதைப்பற்றி யாம் கேட்கும் போது,
கலிதோஷம் இப்படித்தான் இருக்கும் என்றும். இருக்க வேண்டும் என்றும்.



17

அதன் யுகத்தில், அது இருக்கட்டும்.
தலை வணங்கி பணிந்து அதை ஏற்கிறோம்


# ஆனால் "உன்னையே நம்பும்பக்தன் நிலை என்ன பிரபோ"

# ????????????

அவன் பதில்:-


(1) என்னை முழுமையாக நம்பினோர் கைவிடப்படார்.
(2) அவரவர் ஏற்று வந்த கர்மாவால் "சிறிது" தடுமாற்றம்.
(3) கனவு காட்சியில் வெட்டுண்டால் "அந்த க்ஷணம்"
துன்பம் துன்பந்தானே? ஆனால் உண்மையில் இல்லையே.
(4) ஒரு நாமரூபத்தில் தாக்குண்டால், "மறு நாமரூபத்தால்"
அதை சாந்தி செய்து விடுகிறோம்.
(5) நாமரூப கலக்க "மயக்கத்தில்" இருப்பதால் அதை
உணர முடியவில்லை. ஜாக்கிரத்தில்
(6) "மயக்க கலக்க உறக்கம்" உணரலாம்.
நீங்க தருணம் வந்து விட்டது
(7) என்னை பரிபூரணமாக நம்பும் "அனைவரும் அவரவர்
"லக்ஷியத்தை" அடைவர். இது சத்தியம். சத்தியம். சத்தியம்.

கண்ணன்!



13


இந்த நாமரூப தோற்றும் வரை அதன்
"குணதோஷமும்" தோற்றிக் கொண்டுதான்
இருக்கும். நாமரூபம் நாசமானாலன்றி
குணதோஷமும்; அதனால் புண்ணிய பாபமும்;
அதனால் ஜனன மரணமும் இருந்தே ஆகும்.
நாமரூபங்களின் நான் எனதாக
மனம் கற்பனை செய்யும் வரையிலும்;
குணதோஷமும், புண்ணிய பாபமும், ஜனனமரணமும்,
தொடர்ந்தே வரும் என்பது சத்தியமே.
ஓர் நாமரூப இறைவனிடம்
"எல்லாம் "நீயே"" என்றும், "எல்லாம் உனதே" என்றும்,
விட்டுவிட்டால் நாமரூபமும் அதைச்சார்ந்த
அனைத்தும் சர்வநாசமாகி, எல்லாம் பொம்மையே,
எல்லாம் பொம்மலாட்டமே என்பது உறுதி ஆகும்.
அந்தநிலையில் தான் "எல்லாம் மனமே".



(19)


என உணர முடியும். எல்லாம் புதுமைகளே
என காண்பது விசிஷ்டாத்வைதம்.
எல்லாம் மண்ணே என்றும், மண்ணாகிய பரமே
என்றும், பரமாகிய யானே என்றுணர்ந்து
“மௌனாநந்தமாய்” இருப்பதே “அத்வைதம்” ஆகும்.

(14) **6-1-2016** :- புதன்கிழமை காலை 9-10 மணிக்கு
கோவை/சுப்பிரமணியம் & மீனாக்ஷி இல்லத்தில்
**T.V.** முன்பாக அமர்ந்து. ஓர் திவ்விய
காட்சியை அவன் (கண்ணன்) காட்டி அருளினான்.
அது TV காட்சியே. அதில் நடந்த
சம்பவம் **உண்மையே!**
இனி யாம் கண்டுணர்ந்த காட்சியை கீழே காண்க.
இடம் :- திருமந்திர நகர் (தூத்துக்குடி)
சம்பவம் :- இந்த ஏழை வைத்தியம் அடிக்கடி
செல்லும் S.V.K.S. ஸபா/ என்ற பஜன கூடம்.
நடந்த நிகழ்ச்சி :- பஜன் & தீபப்பிரதக்ஷணம்,
அதாவது மெய்யன்பர்கள் கூடி (அனைவரும் ஒன்று), மத்தியில் ஓர்



௨௦

ஏக முகம் உள்ள தீபத்தில் "ஸ்ரீ பகவான்"
ஆவாஹனம் பண்ணி, (கண்ணன் மத்தியில்)
நிற்பதாகவும், அவனைச் சுற்றி வந்து ஆட்டமாடி
பாட்டுப்பாடி ராஜகிரீடையில்
(கோப கோபியர்)
தன்னை மறந்து தலைவனில் கலந்து, ஒன்றும்
ஓர் பரவச நாட்டியமாகும் தீபத்தைச்
சுற்றி பஜனை செய்த வண்ணம்; அனைவர்
உள்ளங்களையும், உருகச் செய்து, ஏங்கச்
செய்து, மனம் ஒன்றி கலக்கச் செய்து.
ஸ்ரீ பகவத் பேரானந்தத்தில்,
மூழ்க வைக்கும் ஓர் திவ்ய
நாம பஜனை நடந்து கொண்டிருக்
கிறது.
(மீனாக்ஷி இல்ல TV ல் நடந்தது.)




உ

ஆனல் இச்சமபவம்.

1950ல் S.V.K.S. லயா பஜனை கூடம்.
மெய்யன்பர்கள் :— இப்
கலந்து கொண்ட
வைத்தியத்துடன்/ கிருஷ்ணமூர்த்தி/
வெங்கடேஸ்/ நாராயணன்/ கோபாலன்/
கோவிந்தன்/ ராமகிருஷ்ணன்/ ராமமூர்த்தி/
சீதாராமன்/ கணேசன்/ வேங்கட சுப்பிர
மணியன்/ அரவிந்தன்/ ரங்கநாதன்/ வேணு
கோபால்/ ராமஸ்வாமி/ நரசிம்மன்/
ஆக இப் பதினைந்து மெய்யன்பர்கள்

இவர்களுடன் இப் வைத்தியமும் இணைந்த நிலையில்.
16 பஜனை குழு ஆகும். எங்கெங்கு
பஜன & தீபப் பிரதட்சணம்



நடந்தாலும்; தகவல் அனுப்புவார்கள்
நாங்கள் அனைவரும் சென்று; பேரானந்தமாய்


ஆடிப், பாடிக், கொண்டாடி
ஆனந்தவெள்ளத்தில்!!!

மூழ்கிவிடுவோம்! அனைவரையும் மூழ்கடிப்போம்.

காணிக்கை ஏதுவும் வாங்குவதும் இல்லை. தரமுயற்
சிசெய்தால் அங்கு போவதும் இல்லை.


**1950 To 1980** வரை இப்பஜனை தொடர்ந்து
நடந்தது.

அதே பஜனைகுழு இன்று TV ல்
நடந்தது. பிரயத்யக்ஷ அனு
பவானந்தம்! இப்பைத்தியம்
அனுபவித்தது
அனுபவ உண்மை:—



அங்கு நடந்த காட்சி:

T.V ல் ஸ்ரீ ல ஸ்ரீ "விட்டல்தாஸ்"
அவருடைய ஸ்ரீ மெய்யன்பர்களுடன்
உருகும் உள்ளத்துடனும், பெருகிஓடும்
கண்ணீருடனும் "திவ்விய நாமபஜன்"
செய்து கொண்டிருக்கிறார்.
அடுத்து அவர் நடத்தும் "தீப
பிரதக்ஷணம்" நடைபெருகிறது.
ஏகமகதீப்பத்துடன்
கோபகோபியர்களாக அவருடைய
"மெய்யன்பர்கள்" உருகும் உள்ளத்துடன்
ஆடிப்பாடி "பிரதக்ஷணம்" செய்கிறார்கள்.




A அந்த ஸ்ரீ பகவத் பஜனையானது; 60 "வருஷங்களுக்குமுன்" திருமந்திர நகர் "மெய்யன்பர்கள்" பாடும் அதே நாமாவளி ஆகும் என அறிக.

B "மெய்யன்பர்களும்" "முன்பு கூறிய" "16 மெய்யன்பர்களாகும்!

C தீபம்:- எமதயன் திருடன் "கண்ணனாகும்"!

D பாடும் இடம்:- திருமந்திர நகர் அதேமேவர். அங்குள்ள படங்கள் மற்றும் காட்சிகள்.

E அங்கு ஓர் வைத்தியர் அவர்களுடன் ஆடிப் பாடுகிறது. இங்கு ஓர் வைத்தியம் கண்களில் கண்ணீர் கரைபுரண்டோட ஆனந்த வெள்ளத்தில் மிதக்கிறது.




காலம், நேரம், கணக்கிட முடியவில்லை?

காட்சி பூரணமாய் நிறைவு பெறுகிறது.

உலகம் பழைய நிலைக்கு வந்து விட்டது.

16

மங்கள ஆரத்தியின் ரகஸ்யம்:

(A) ஒன்றாக ஆகிவிட்டோம்:-

மனித இனம் அனைத்தும், ஜாதி, மதம், நாடு, பாஷைகள், உள்ளதெல்லாம் மனம் படைத்த மனித இனம் எல்லாம் எந்தவித பேதமும் இல்லாமல் அனைத்தும் ஒன்றாகி விட்டோம் என உணர்க.

(B) நலமாக ஆகிவிட்டோம்:-

மேலே கூறிய நிலையில் எல்லாம் ஒன்றாக ஆகிவிட்டால், மனோநலமும் / ஆன்மசுகமும்



பெற்றுவிடுவோம். அப்படி ~~[illegible]~~

பெற்ற நிலையில் இருமைகள்
ஒழிந்த நிலையில் எங்கும் எதிலும்
எல்லாமும் ஒன்றையான ஆனந்தமே
அதுவே ஆன்மசுகம்.
அதை பெற்று விட்டோம்.
அது சிவமே (இது உபாணமூர்த்தி) என
ஆகிவிட்டோம்:-
ஏக குணமாகிய ஸத்வ குணமாகிவிட்டோம்.
இந்நிலையில் தான் விருத்தி
பண்படுத்தப்படுகிறது. அழியவில்லை
மனம் உயர்த்தப்படுகிறது என உணர்க.
அறிவு பிரகாசிக்க ஆரம்பமானது.

மனோநலம்:- நான், என்னுடைய எனது ஒழிந்தால்
மனோநலம். ஆன்மசுகம்:- யாக்ஷ ஜீவனாவேம்
யாம் பதிய கடவானின் குழந்தையே என உணர்வது
ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றான நிலை) ஆன்ம சுகம்.



27

நாம் நம்மூர்த்தி ஆனதன்மையால் ஏக
குணச்சொரூபமாக நாம் இருக்கிறோம்.
ஆகவே "மறைநலம்" சாத்தியமாகிறது.
இங்கு "நாம்" அவன் குழந்தை யென்பது உறு
தி ஆகிறது. இங்கு நாம் ஜீவனல்ல என்ற
உறுதியினால் ஆத்ம சுகமும் பெற்று விடுகிறோம்.
இதுவரை "அது" / "அது" என குறிப்பிட்டதெல்லாம்
பரிபகவான்மையே ஆகும். இங்கு அது என்பது
பூரண வைத்தன்யமாகும். மறு நிலையில் அது
என கூறுவதெல்லாம் பரிபூரண வைத்தன்யமாகும்.
D அதுயாமே ஆகிவிட்டோம் (அதுபரம்)
இயக்கமற்ற காலாதீத பரமும்; "மாயாகவும்
பில்லாத பூரண வைத்தன்யமும்; அதுயாமே
அது நாமல்ல" என வருகிறது. "அது நாமே / நாமே அது"
என அனுபவம் வந்தால்; அது ஏ.சன் நிலையாகிய
விஷிஷ்டாத்வைதமாகும். அது பரிபகவான்மையும்;
மனம் சாந்தியான நம்மையும் இணைந்த நிலையில்
இருமை ஆகும். அவ்விருமையால்

28




இங்கு நீங்கள் என்ற வார்த்தைக்கு இடமே இல்லை. அது வாக்கு விளக்கத்திற்காக "உபசார வசனமாக" போடப்பட்டது என உணர்வால் உணர்க.

நாம் உலகை காணும் நிலையில், எல்லாம் "குணதோஷமற்ற" பதுமைகளாக/ தோற்றும் என உணர்க. (காணும் நாம், காணும் உலகம்) இந்நிலையில் "விகாரம்" (காட்சி) "விவகாரம்" (பிரச்சனையாகிய மன உளைச்சல்கள்)" அற்றுப் போகும். அங்கு சாந்தி, அமைதி, திருப்தி, ஆனந்தம் உண்டாகும்.

(E) அது நீயாகிவிட்டோம் :- (நீங்களும் யாமாகிவிட்டோம்) இங்கு "யாம்" என சொல்லும் வார்த்தை, ஈசனையும் நம்மோடு இணைத்து, மயமான நிலையில்; காவாதீத "பரத்தோடு" இணைந்து, கரைந்து, மயமான, நிறைவான நிலையில் "மூன்றும்" ஒன்றான நிலையில் "நீங்களும்" என உங்களையும் இணைத்துக் கொண்டு; "பரிபூரணத்துவம்" பெருகிறது. இங்கு "யாம்" என்பது "இருமையற்ற ஓர்மை" ஆகும் என இதை நிறைவு செய்கிறோம்.

29



1 முத்தொழிலையும் அநாயாசமாக
செய்யும் ஒருவனே பலபல நாமரூபங்களாலே
அழைத்து, இவன் பெரியவனா? அவன் பெரியவனா?
என மன கற்பனையால் மயங்கி, தயங்கி,
அவனை தேடும் பணியில் காடு மலை, ஆலயம்
என திரிந்தலைந்தோம் நாங்கள். அன்போடும்
ஆதரவோடும், அரவணைத்து, "அதுவுமல்ல"
"இதுவுமல்ல" "எதுவுமல்ல" என அபயஸ்
தம் கொடுத்து; நீ ஜீவனல்ல
மனதால் உன்னை ஜீவன் என எண்ணிக்கொண்டிருந்தாய்
என உவமான உவமேயங்களால் சுட்டிக்
காட்டி; நீ தேடும் தெய்வம் நீயே என
உள்முகமாக திருப்பி; எங்களையே தெய்வ
மாக்கிய எங்கள் ஸத்குருவே! உன் பாதம்
பணிந்து உன்னை நமஸ்கரிக்கிறோம்.




Abode of Love

You Are Everything!